**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(04.10.2022 முதல் 08.10.2022 )**

**அறிக்கை எண் 079/2022** **தேதி.03.10.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 30.9.22 முதல் 02.10.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம 60 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-19 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (30.09.2022 முதல் 02.10.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 08.10.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30/09 | 01/10 | 02/10 | தேதி | நாள்-1 04/10 | நாள்-2 05/10 | நாள்-3 06/10 | நாள்-4 07/10 | நாள்-5 08/10 |
| 0.0 | 0.9 | 0.5 | மழை (மி.மீ) | 4 | 4 | 6 | 8 | 34 |
| 32 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 34 | 33 | 32 |
| 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 23 | 24 | 23 | 22 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 2 | 8 | 8 |
| 79 | 72 | 86 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 80 |
| 60 | 71 | 75 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 50 |
| 19 | 9 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 4 | 4 | 6 |
| 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 290 | 280 | 280 | 290 | 290 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (04.10.2022 முதல் 08.10.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலோசன தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக

திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 04-10-2022 | 0.1 | 0.0 | 0.0 | 0.3 | 0.4 | 0.6 | 0.0 | 9.0 | 3.0 | 3.0 | 2.0 | 5.0 |
| 05-10-2022 | 0.2 | 0.0 | 0.0 | 0.5 | 0.5 | 0.7 | 0.0 | 7.0 | 2.0 | 3.0 | 3.0 | 4.0 |
| 06-10-2022 | 5.3 | 0.0 | 0.0 | 0.1 | 2.1 | 6.7 | 0.0 | 12.0 | 6.0 | 8.0 | 6.0 | 7.0 |
| 07-10-2022 | 5.7 | 0.0 | 0.0 | 0.4 | 0.9 | 3.9 | 11.0 | 11.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 |
| 08-10-2022 | 6.5 | 20.3 | 11.1 | 11.8 | 8.0 | 8.7 | 26.0 | 26.0 | 29.0 | 26.0 | 28.0 | 30.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழையுடன் காற்றின் வேகம் **4-6** கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் பருத்தி, மஞ்சள், மக்காச்சோளம், தக்காளி, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு தக்க வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>மானாவாரி விதைப்பில் **20** அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்புஅமைத்து அல்லது குறுக்கு உழவு செய்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும். |
| நெல் | விதைப்பு, வளர் மற்றும் பூக்கும் பருவம் | நல்ல மழை எதிர்பார்க்கப்படுவதால்எனவே தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>சம்பா பருவம் முடிவடைந்து விட்டதால் சம்பா நெற்பயிருக்காக நாற்றாங்கால் விதைப்பு மற்றும் நேரடி விதைப்பு செய்யவதை நிறுத்தவும். |
| சோளம், | விதைப்பு | மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்யவுள்ள பயிர்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் நரிப்பயிர் விதைக்கலாம். |
| பருத்தி | விதைப்பு | நிலவும் அதிக மண் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக பருத்தி செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த **15** வது இடைக்கணுவுக்கு மேல்உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் **40** மிலி கிராமை **1** லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த **60** முதல் **90** வது நாளில் தெளிக்கவும் .<br>தொடர்ந்து மழை பெய்வதால் பருத்தியில் துத்தநாகசத்து |

| | | |
|---|---|---|
| | | இரகத்திற்கு தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நடவு | மழையை பயன்படுத்தி தக்காளியில் நாற்று பாடுவாசி செய்யவும். மழை இல்லாத பட்சத்தில் குறைந்த அளவு நீர் பாய்ச்சவும். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | வடிகால் வசதி ஏற்படுத்திய பிறகு மஞ்சளுக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சானக்கொல்லியை இடுவதன் மூலம் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.<br>120 நாட்கள் வயதான மஞ்சள் பயிரில் மேலுரமாக ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் இடவும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி மீ வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| திராட்சை | | திராட்சை பயிரில், அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் பூஞ்சாண நோய்க்கு சாதகமான வெப்பநிலை நிலவுவதால் அடிச்சாம்பல் நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்து 0.25 சதவீதத்தினை 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். |
| கால்நடைகள் | | கால்நடைகளில் பால் கறந்த பிறகு மடியை பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு நன்றாக கழுவி விடுவதன் மூலம் மடிவீக்க நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். நனைந்த தீவனத்தை உபயோகப்படுத்துவதை தடுப்பது நல்லது.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>நீரினால் ஏற்படும் நோய்களை தவிர்க்க கால்நடைகள் வெளியில் தேங்கியுள்ள தண்ணீர் அருந்துவதை தவிர்த்து போதிய அளவு சுத்தமான குடிநீரினை கால்நடைகளுக்கு வழங்கவும். |

## குறுஞ்செய்தி

- மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரியில் 20 அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்புஅமைத்து அல்லது குறுக்கு உழவு செய்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**